**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 7** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | முத்தையன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். நான் ஓட்டுநராக வேலைசெய்கிறேன். வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணனை எனக்கு தெரியும். 26.03.2023ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது ராமகிருஷ்ணன் இறந்துவிட்டதாக எனக்கு போன்வந்தது. பின்னர் பாரதிதாசன் நகரில் உள்ள அவர் வீட்டில் போய் அவர் உடலை பார்த்தேன். போலிசார் வந்தார்கள். பிரேத பரிசோதனைக்கு போகவேண்டும் என்று போலிசார் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதாகும். அந்த கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன ராமகிருஷ்ணன் எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன் ஆவார். நான் காலை 09.00மணிக்கு பாரதிதாசன் நகரில் உள்ள வீட்டிற்கு சென்றேன். அங்கு உறவினர்கள் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறஇயலாது. 11.00 மணிக்கு மேல் போலிசார் என்னிடம் கையெழுத்து

வாங்கினார்கள். பிரேத பரிசோதனை செய்தததது சம்மந்தமாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்கள் கையெழுத்து வாங்கியதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது விவரம் எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணன் எப்படி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.